# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# பதினோராம் பத்து

## இரண்டாம் திருமொழி - குன்றமெடுத்து
## தலைவி பிறிவாற்றாது வருந்திக் கூறும் பாசுரம்

** குன்றம் எடுத்து மழை
தடுத்து * இளையாரொடும் *
மன்றில் குரவை பிணைந்த
மால் * என்னை மால் செய்தான் **
முன்றில் தனி நின்ற பெண்ணை
மேல் * கிடந்து ஈர்கின்ற *
அன்றிலின் கூட்டைப் * பிரிக்க
கிற்பவர் ஆர் கொலோ? 1

பூங்குருந்து ஒசித்து ஆனை
காய்ந்து * அரிமாச் செகுத்து *
ஆங்கு வேழத்தின் கொம்பு
கொண்டு * வன்பேய் முலை
வாங்கி உண்ட ** அவ்வாயன்
நிற்க * இவ்வாயன் வாய் *
ஏங்கு வேய்ங்குழல் * என்னோடு
ஆடும் இளமையே 2

மல்லொடு கஞ்சனும் துஞ்ச *
வென்ற மணிவண்ணன் *
அல்லிமலர்த் தண் துழாய் *
நினைந்து இருந்தேனையே **
எல்லியின் மாருதம் வந்தடும் *
அது அன்றியும் *
கொல்லை வல் ஏற்றின் மணியும் *
கோயின்மை செய்யுமே 3

பொருந்து மாமரம் * ஏழும்
எய்த புனிதனார் *
திருந்து சேவடி * என்
மனத்து நினை தொறும் **
கருந்தண் மாகடல் * கங்குல்
ஆர்க்கும் அது அன்றியும் *
வருந்த வாடை வரும் *
இதற்கு இனி என் செய்கேன்? 4

அன்னை முனிவதும் * அன்றிலின்
குரல் ஈர்வதும் *
மன்னு மறிகடல் ஆர்ப்பதும் *
வளை சோர்வதும் **
பொன் அங்கலை அல்குல் * அன்ன
மென்னடைப் பூங்குழல் *
பின்னை மணாளர் * திறத்தம் ஆயின
பின்னையே 5

ஆழியும் சங்கும் உடைய *
நங்கள் அடிகள் தாம் *
பாழிமையான கனவின் *
நம்மைப் பகர்வித்தார் **
தோழியும் நானும் ஒழிய *
வையம் துயின்றது *
கோழியும் கூகின்றது இல்லை *
கூர் இருள் ஆயிற்றே! 6

காமன் தனக்கு முறை
அல்லேன் * கடல் வண்ணனார் *
மாமணவாளர் * எனக்குத்
தானும் மகன் சொல்லில் **
யாமங்கள் தோறு எரி வீசும் *
என் இளம் கொங்கைகள் *
மாமணி வண்ணர் * திறத்தவாய்
வளர்கின்றவே 7

** மஞ்சுறு மாலிருஞ்சோலை *
நின்ற மணாளனார் *
நெஞ்சம் நிறை கொண்டு போயினார் *
நினைகின்றிலர் **
வெஞ்சுடர் போய் விடியாமல் *
எவ்விடம் புக்கதோ! *
நஞ்சு உடலம் துயின்றால் *
நமக்கு இனி நல்லதே 8

காமன் கணைக்கு ஓர் இலக்கமாய் *
நலத்தின் மிகு *
பூமரு கோல * நம் பெண்மை
சிந்தித்து இராது போய் **
தூமலர் நீர்கொடு * தோழி!
நாம் தொழுது ஏத்தினால் *
கார் முகில் வண்ணரைக் * கண்களால்
காணலாம் கொலோ? 9

** வென்றி விடை உடன் *
ஏழ் அடர்த்த அடிகளை *
மன்றில் மலிபுகழ் * மங்கை மன்
கலிகன்றி சொல் **
ஒன்று நின்ற ஒன்பதும் *
உரைப்பவர் தங்கள் மேல் *
என்றும் நில்லா வினை * ஒன்றும்
சொல்லில் உலகிலே 10

**அடிவரவு:** குன்றம் பூ மல்லொடு பொருந்து அன்னை ஆழி காமன்தனக்கு மஞ்சுறு காமன்கணைக்கு வென்றி மன்னிலங்கு

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---